முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1217

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.01.2023, சனிக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட குருராஜனே
அன்னதான சக்திஊட்டி உலக மக்களை
அறம்குன்றா ஞானவான்களாக தேர்வுசெய்ய
ஆற்றல்பட உலகமெங்கும் தர்மம் வளர்க்கின்ற அரங்கனே
2. அரங்கனே ஆறுமுக ஞானியே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது கலைதிங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் தை மாதம் 14 ம் நாள் 28.01.2023, சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்கன் புகழ் தரணி எங்கும்
தக்கதொரு உலக மாற்றமாக பரவிவர
மண்ணுலகம் அரங்கன் சன்மார்க்கத்தாலே
மகத்துவம் பெற்று ஞானலோகமாகும்
4. ஆகவே அரங்கன் வழி வரும் மக்கள் மூலம்
அகிலமே ஞானத் தலைமைதனை காணும்
வரமென அரங்கன் தர்மம் வளரவளர வையகமெங்கும் வளமான சூழல் பெருகி
பெருமைபட ஆறுமுகன் என் வெளிப்பாடாக பேருலகமெல்லாம் ஞான ஆட்சி மலரக்கூடும்
5. கூடவே அரங்கன் தொண்டர்படையே
குவலயத்தை மாற்றும் மகா சக்தியாக
அறமோடு உலகமெங்கும் பரவி இனிதே
அற்புதம் அரங்கன் அவதார நோக்கமாக நிறைவேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–